www.tamilarangam.net



# இலங்கையில் சமாதானத்திற்கு இன்னுமொரு பொன்னான சந்தர்ப்பம்

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி -சர்வதேசப் பிரிவு

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலங்கையில் சமாதானத்திந்கு இன்னுமொரு பொன்னான சந்தர்ப்பம்

செப்டெம்பர் - ஒக்டோபர் 2006
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி - சர்வதேசப் பிரிவு

Web Site: www.epdpnews.com
Email: epdp@sltnet.lk



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இங்கிருந்துதான் தொடங்க முடியும்!

தமிழ் பேசும் மக்களின் அரசியலுரிமைப் பிரைச்சினையும்
அதன் தீர்விற்கான தேடல் முயற்சிகளும்
அகிம்சை வழியில் இருந்து ஆயுதப் போராட்டம் வரை..
ஆயுதப் போராட்டத்திலிருந்து அதன் பின்னரான
அனுபவங்களினாலான மாற்று வழி அர்ப்பணிப்புகள் வரை...
நிறைவான படிப்பினைகளை எமக்கு தந்திருக்கின்றன!
அந்த படிப்பினைகள் தீர்வு ஏன் கிட்டவில்லை என்ற
கேள்விக்கு அர்த்தமுள்ள விடைகளையும் தந்திருக்கின்றன.
எமது மக்களின் அரசியலுரிமை சுதந்திரத்திற்கான
தீர்வை நோக்கிய திசையும் அதற்கான தேடலும்
எதுவென்று நாம் திடமான தீர்மானம் எடுக்க மறுத்து
தீர்வு எம்மை தேடி வரும் என்று காத்திருப்பது
காலத்தை விரையம் செய்யும் காரியம் மட்டும்தான்.
காலத்தின் விரையங்கள் ஒவ்வொன்றும் எமது மக்களின்
வாழ்வியல் உரிமை மீது மனிதாபிமான நெருக்கடிகளை
சுமத்தி வருகின்றன! தீர்வு ஒரு போதும் எம்மைத் தேடி
வரப்போவதில்லை. தீர்வை நோக்கி நாமேதான் பயணித்தாக
வேண்டும். எரிகின்ற பிரைச்சினைக்கு இறுதித் தீர்வு சமஷ்டித்
தீர்வு என்பதுதான் தீர்மானம்! இதில் மறுப்பிற்கு இடமில்லை!
ஆனாலும்....இந்த மாறுதலை நிகழ்த்தி முடிக்க
நாம் பயணிக்க வேண்டியது சாத்தியமான ஒரு பாதையில்
மட்டும்தான்! சிக்கல் நிறைந்த ஒரு அரசியல் தளத்தில்
இது நடக்காது என்ற நம்பிக்கையீனங்களையும்,
நடைமுறைச் சாத்தியமானதொரு வழிமுறை வெற்றி கொள்ளும்
என்பது எமது நம்பிக்கையான முடிவு! இங்கிருந்துதான்
தொடங்க வேண்டும் என்பது எமது கட்டாயமான திணிப்பு அல்ல!
இது எமது அனுபவங்கள் எமக்கு கற்றுத்தந்த பாதை!
மாறி வரும் அரசியல் சூழல் சம்மதித்தால் எங்கிருந்தும்
தொடங்கலாம்! ஆனால்...
அதை விடவும் இது நடைமுறைச் சாத்தியம் என்றால்....
இங்கிருந்து தொடங்க உங்களுக்கு சம்மதமா?.....
இந்த கைநூலை உங்களிடம் ஒப்படைத்து விட்டு
உங்கள் கருத்துகளுக்காக காத்திருக்கின்றோம்.



## வாய்ப்பான சந்தர்ப்பங்கள் மகத்தானவை

மனித வரலாற்றில் வாய்ப்பான சந்தர்ப்பங்கள் எல்லாப் பொழுதுகளிலும் வருவதில்லை. எப்போதாவது ஒருமுறை தான் அவை வந்து போகும். அவ்வாறான அரிய சந்தர்ப்பங்களை கெட்டியாகப் பிடித்து தமது சமூகத்தின் நன்மைக்காகவும் நல் வாழ்வுக்காகவும் மிகச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளுபவர்களே புத்திசாலிகளாகப் போற்றப்படுகின்றார்கள். இது ஒரு சமூகத்துக்கும் ஒரு தேசத்துக்கும் மட்டுமல்லாது, ஒவ்வொரு தனி மனிதர்களுக்கும்கூட மிகச் சரியாகப் பொருந்தும்.

புத்திசாலி மனிதர்கள் தமக்கு இயல்பாக கிடைக்கும் சந்தர்ப்பங்களை தவறவிடாது சரியாக செயற்பட்டு மேலும் பல வாய்ப்பான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொள்ளுவார்கள். ஆனால் அறிவீனம் அவர்களை ஆட்கொள்ளும்போது அவர்கள் தமக்கு இயல்பாகக் கிடைக்கும் அரிய சந்தர்ப்பங்களைக்கூட கைநழுவ விட்டுவிடுவார்கள். இதற்கு மிகச் சிறந்த உதாரணமாக எமது நாட்டின் கடந்த ஐம்பது ஆண்டுகால அரசியல் வரலாற்றையும், கடந்த இருபத்தைந்து ஆண்டுகால எமது தமிழ் அரசியலையும் நாம் எடுத்துக் கொள்ளலாம்.

இலங்கையின் அரசியல் வரலாற்றில் இனங்களுக்குள் சமாதானத்தையும் சகவாழ்வையும் ஏற்படுத்துவதற்காக எம்முன்னே வாய்ப்பாக வந்துபோன சந்தர்ப்பங்கள் பல. அதிலும் கடந்த முப்பது வருடகாலமாக பாரிய அழிவுகளை ஏற்படுத்திய உள்நாட்டு யுத்த சூழ்நிலையில் இருந்து விடுபட்டு நடைமுறைச் சாத்தியமான தீர்வொன்றை எட்டுவதற்கு எமக்கு கிடைத்திருந்த சந்தர்ப்பங்கள் பலப்பல.

ஆனால் அச்சந்தர்ப்பங்கள் அனைத்துமே சில அரசியல் கட்சிகளினதும் சில தனி நபர்களினதும் சுயநல நோக்கங்களின் காரணமாக தவறாக கையாளப்பட்டு குழப்பியடிக்கப்பட்டன. அல்லது சரியான தொலைநோக்குப் பார்வை இல்லாமையினால் சரியாக பயன்படுத்திக் கொள்ளப்படாமல் தவறவிடப்பட்டன. அத்துடன் மீண்டும் வாய்பான சூழல்கள் ஏற்படுவதை தடுக்கும் விதமான பாரிய தவறுகள்கூட விடப்பட்டன.

www.tamilarangam.net

இத்தகைய தவறுகளின் காரணமாக, இந்த அழகிய இலங்கைத் தீவில் ஒரு சமத்துவமானதும் கௌரவமானதுமான வாழ்வுக்காக தமது உரிமையினை வேண்டி நின்ற தமிழ் பேசும் மக்களின் கடந்த ஐம்பது வருடகால நியாயமான கோரிக்கையானது இன்று எவராலும் அக்கறையோடு பார்க்கப்படாத விடயமாக ஆக்கப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி, அஹிம்சை ரீதியான போராட்ட வழிமுறைகளில் ஆரம்பித்து இறுதிப் போராட்ட வடிவமான ஆயுதப் போராட்டத்தின் உச்ச கட்டத்தினை நாம் எட்டிவிட்டோம் என்று பெருமைப்பட்டுக் கொண்டாலும், தமிழ் மக்களின் அன்றாட வாழ்வின் இன்றைய அவல நிலைமையானது பல உண்மைகளை எமக்கு துலாம்பரமாக வெளிக்காட்டி நிற்கின்றது.

'வாய்ப்பான சந்தர்ப்பங்களை நாம் இறுகப் பற்றிக் கொள்ளும்போது அது நமக்கு மேலும் பல அரிய சந்தர்ப்பங்களை பெருக்கித் தரும்' என்கின்ற நடைமுறை யதார்த்தைப் புரிந்து கொள்ளாமல் போனதால், நாம் எப்போதும் அதற்கு நேர்மாறானதையே செய்து வந்துள்ளோம். ஆகவேதான் இன்று மீண்டும் நாம் அதே தவறுகளை செய்யக்கூடாது என்பதில் திடமாக இருக்க வேண்டும்.

இலங்கை வாழ் தமிழ், முஸ்லீம் மக்களும் சிங்கள மக்களும் நீண்ட காலமாக எதிர்பார்த்தபடி, இன்று மீண்டும் எமது அயல் நாடான இந்தியா இலங்கையில் சகல இனங்களுக்கும் இடையே சமாதான சகவாழ்வை ஏற்படுத்துவதற்காக தனது நேசக்கரத்தை நீட்டியுள்ளது. கடந்த இரு தசாப்த காலத்தில் இலங்கையில் தமக்கு ஏற்பட்ட மிகவும் வேதனையான, கசப்பான அநுபவங்களை மறந்து அது தனது நேசக்கரத்தை மீண்டும் நீட்டியிருப்பதை எமக்கு வாய்பானதொரு பொன்னான சந்தர்ப்பமாக மாற்றிக் கொள்ளுவது எமது கைகளில்தான் இருக்கின்றது, என்பதை நாம் மனதார ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இன்றைய வாய்ப்பான சந்தர்ப்பத்தை சரிவர நாம் பற்றிக் கொண்டால், அது நேற்றைய எமது தவறுகளையும் எமது தோல்வி களையும்கூட இல்லாமல் செய்துவிடும், என்கின்ற உண்மையை நாங்கள் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ் சமூகத்தில் ஜனநாய கத்தையும் பன்முகத்தன்மையும் நடைமுறைப்படுத்தக் கூடியதான கௌரவமான அரசியல் தீர்வொன்றை ஏற்படுத்தக் கூடியதாக, இச்சூழ் நிலையை மிகச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளுவோம். ■



**தமக்குள் ஜனநாயகத்தைக் கொண்டிராத ஒரு சக்தி மக்களுக்கு ஜனநாயகத்தைக் கொடுக்க முடியாது, ஜனநாயகமானது எப்போதும் உள்ளிருந்தே வர வேண்டும்**

*- மகாத்மா காந்தி -*

உலகிலேயே மிகப் பெரிய ஜனநாயக நாடு என்று போற்றிப் புகழப்படுவது இந்தியா. கடந்த 60 வருடகால வரலாற்றில் அத்தேசம் உள்ளிருந்தும் வெளியிருந்தும் சந்தித்த சோதனைகள் பல. ஆனால் அவற்றையெல்லாம் மீறி அது எண்பித்த சாதனைகள் மிகப்பல. அதற்கு காரணமே அதன் ஜனநாயக பன்முகத்தன்மைதான். அத்தகைய ஒரு தேசத்துக்கு மிக அருகாமையில் இருந்தும்கூட அதனிடமிருந்து பாடங்களைக் கற்று எமது தேசத்துக்குள் இருந்து எழுந்த சவாலுக்கு முகம் கொடுக்க முடியாமற் போனதையிட்டு இன்று எமது தேசம் மீண்டும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

தமிழ் மக்களின் அரசியல் ஆயுதப் போராட்டமாக கூர்மையடைந்த பொழுதும்கூட, புகழ் படைத்த அந்த ஜனநாயக நாட்டின் கரங்களையே நாம் அன்றும் இறுகப் பற்றிக்கொண்டோம். அன்று நட்போடும் நம்பிக்கையோடும் அந்தத் தேசம் எமக்கு கைகொடுத்தது. அந்தக் நம்பிக்கைக் கரங்களின் மீது காறி உமிழ்ந்த தவறுக்காக கடந்த இருபது வருடங்களாக தமிழ், முஸ்லிம் மக்கள் மட்டுமல்ல ஒட்டுமொத்த இலங்கைத் தேசமுமே பாரிய தண்டனையை அனுபவிப்பதை நாம் அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இன்றும்கூட இலங்கையில் சகல இன மக்களாலும் எற்றுக் கொள்ளக்கூடியதும், பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டதும், உடனடியாக நடைமுறைப் படுத்தக்கூடியதுமான ஒரு தீர்வு உண்டென்றால், அது இந்திய தேசம் எமக்கு பெற்றுத் தந்த, வடக்கும் கிழக்கும் இணைந்த மாகாண சபைத் தீர்வு ஒன்றுதான் என்பதை சகலரும் மனம் திறந்து ஏற்றுக்கொள்ள வேண்டும். கடந்த பத்தொன்பது வருட காலத்தை நாம் வீணாக கொடிய யுத்தத்தில் செலவழிக்காது அந்தத் தீர்வின் பயன்பாடுகளை பெற்றுக்கொள்ள முனைந்திருப்போமானால் தமிழ், முஸ்லிம் மக்களும் இந்தத் தேசமும் இன்றைய அவல நிலைமைக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்க மாட்டாது என்பதே உண்மையாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பல்லினங்கள் வாழும் ஒரு நாட்டில், ஒருமொழிக் கொள்கை, ஒற்றையாட்சி முறைமை போன்றவை அமுலாக்கப்பட்டால் அது நீண்ட காலத்தில் அச்சமூகங்களுக்கிடையே முரண்பாடுகளை உருவாக்கும் என்பதை இந்தியா அன்றே தீர்க்கதரிசனத்துடன் இனங்கண்டது. அதன் விளைவே தற்போது இந்தியாவில் உள்ள மாநில சுயாட்சி முறையாகும். இன்றும் இந்தியா ஐக்கியமாக இருப்பதற்கான அத்திவாரமும் அதுவே.

இலங்கையில் ஒற்றையாட்சி முறைமையை எதிர்த்துக்கொண்டு, வடக்கு கிழக்கில் மட்டும் ஒருகட்சி ஆட்சி என்னும் ஜனநாயகத்துக்குப் புறம்பான கோட்பாட்டை உலகம் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று புலிகள் எதிர்பார்த்தனர். அதுவும் எந்தவிதமான ஜனநாயகப் பண்புகளையும் மதிக்காத, ஜனநாயகத் தேர்தல் மீதும் மக்களின் வாக்குரிமை மீதும் சற்றும் நம்பிக்கையற்ற ஒரு அமைப்பானது தன்னிடம் அந்த அதிகாரத்தை தரும்படி கோருவது எத்தகைய மடமைத்தனம். அவர்களால் முன்வைக்கப்பட்ட தமிழர்களின் ஏகபிரதிநிதித்துவம் என்பது இன்று சகலராலும் நிராகரிக்கப்பட்டுவிட்டது. அண்மையில் இந்தியா, ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகம் உட்பட ஏனைய மாற்று தமிழ் தலைமைகளை சந்தித்து பேசியதன் மூலம் இந்த ஏகபிரதிநிதித்துவ கருத்தை தாமும் நிராகரிப்பதாக மிகத்தெளிவாக வெளிப்படுத்தியுள்ளது. ■



# உறுதியான எம் தீர்வு முன்மொழிவானது தேச நிர்மாணத்திற்கு வழிகோலட்டும்

- ஐக்கிய இலங்கைக்குள் வாழும் சகல இன மக்களுக்கிடையே சமாதான சகவாழ்வு
- மத்தியில் கூட்டாட்சியும் மாநிலத்தில் சுயாட்சியும்
- வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு விசேட அதிகாரப் பகிர்வு
- வடக்கு-கிழக்கு மாகாணங்களில் வாழும் முஸ்லீம் மக்களுக்கு அகச்சுயாட்சி அதிகாரம்

## ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் நடைமுறைச் சாத்தியமான மூன்று கட்டத் தீர்வு ஏன்?

தமிழரின் போராட்ட வழிமுறைகளில் முன்னர் பல தவறுகள் விடப்பட்டிருக்கலாம். தவறுகள் என்பது தோல்விகள் அல்ல. ஆனால் எமது தவறுகளுக்காக மற்றவர்கள் மீது எப்போது நாம் குற்றம் சுமத்துகிறோமோ அப்போதே நாம் தோல்வி கண்டவர்களாவோம். தமிழ் பேசும் மக்களின் பிரைச்சினை இன்றுவரை தீராமல் இருப்பதற்கு நாம் அரசியல் ரீதியாகவும் நடைமுறை ரீதியாகவும் விட்ட தவறுகளே காரணம். ஆனால் அதற்காக மற்றவர்களை குற்றம் சொல்லுவதைவிட நாம் வேறெதனையும் செய்யாமல் இருந்ததே இன்றைய எமது தோல்வி நிலைமைக்கு காரணமாகும்.

இலங்கை அரசைக் குற்றம் சொன்னோம். எம்முடன் கூடவே கைகோர்த்து போராடிய சகநண்பர்களை குற்றம் சொன்னோம். இந்திய தேசத்தை குற்றம் சொன்னோம். உலக நாடுகளை குற்றம் சொன்னோம். ஆனால் எமது பிரைச்சினைக்கான தீர்வில் ஒரு அடிகூட முன்னோக்கி நகர முடியவில்லை. எந்தவொரு வெற்றிகரமான பயணத்திற்கும் ஒரு ஆரம்ப நடவடிக்கையானது அவசியம். உச்சியை எட்டிப் பிடிக்க வேண்டும் என்ற கனவு மட்டும் ஒருவரை மேலே ஏற்றிவிடாது. அதற்காக ஏணியின் முதல் படியில் காலை வைத்து ஏறத் தொடங்க வேண்டும். சாதகமானதும் சாத்தியப்பாடானதுமான செயற்பாடுகளே எமக்கு வெற்றியை ஏற்படுத்தித் தரவல்லன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எந்த விதமான தொலை நோக்குமின்றி கண்மூடித்தனமாக மீண்டும் தொடக்கி விடப்பட்டுள்ள யுத்தத்தின் காரணமாக வடக்கு-கிழக்கின் சகல அம்சங்களும் சீர்குலைந்து போயுள்ளன. தமது நாளாந்தப் பணிகளை சிரமமின்றி செய்வதற்குக்கூட எந்தவிதமான நிர்வாக கட்டமைப்புக்களும் இன்றி மக்கள் தவிக்க விடப்பட்டுள்ளனர். இத்தகைய சூழ்நிலையில் தற்போது வடக்கு கிழக்கில் மீண்டும் ஒரு நிர்வாக முறைமை அவசியம். அதிலும் குறிப்பாக தமிழ் பேசும் மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளால் நடத்தப்படும் நிர்வாகமாக அது அமைய வேண்டும். மத்திய அரசாங்கத்தின் முழு ஆதரவும் அந்த நிர்வாகத்திற்கு இருக்க வேண்டும். இத்தகைய விடயங்கள் அனைத்தையும் கணக்கில் எடுத்தே இன்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தனது நடைமுறைச் சாத்தியமான மூன்று கட்டத் தீர்வு முயற்சியை முன்வைக்கின்றது.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி தன் முன்மொழிவை நடைமுறைப் படுத்துவதற்கு மூன்று கட்டமான படிமுறை செயற்பாட்டையும் முன் வைக்கிறது. ஒரு நிரந்தரத் தீர்வுக்கான முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் இக்கட்டத்தில் தமிழ் பெசும் சமூகமானது சுமுகமாகவும் சாதகமாகவும் அதைநோக்கி முன் நகருவதற்கு இது உதவும் என்றும் நாம் நம்புகின்றோம்.

**முதலாவது கட்டம்**

இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் உருவாக்கப்பட்ட 13வது திருத்தச் சட்டத்தின்படி மாகாணசபை முறையை முழுமையாக அமுல்ப்படுத்துகின்ற அடிப்படையில், வடக்கு-கிழக்கு மாகாண சபை நிர்வாகத்தை மீள இயங்கச் செய்தல். ஜனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பபட்ட மக்கள் பிரதிநிதிகளிடம் வடக்கு-கிழக்கு மகாணசபையை கையளிப்பதன் மூலம் அம்மக்களின் ஜனநாயக அரசியல் தலைமைக்கு அங்கீகாரமளித்தல். அவ்வாறு மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதி நிதிகளிடம் வடக்கு-கிழக்கின் நிர்வாக அதிகாரத்தை கையளிப்பதானது, தமிழ் பேசும் மக்களின் நீண்டகால நியாயமான கோரிக்கையான அரசியல் உரிமைகளை ஒரு ஜனநாயகக் கட்டமைப்புக்குள் அவர்களிடம் கையளிப்பதற்கான முதற் படியாக கொள்ளப்படலாம்.

**இரண்டாவது கட்டம்**

13வது திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் முழுமையாக அமுல்படுத்தப்படும் வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கு, பாராளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மை வாக்குகளுடன் திருத்தங்களை மேற்கொண்டு,



பல மேலதிக அதிகாரங்களை வழங்குவதன் மூலம் அதனை கூடிய அதிகாரங்களுடனான மையமாக மாற்றுவதற்கு வகை செய்தல். இணைப்புப் பட்டியல் என்னும் விடயதானத்தை அகற்றுவதன் மூலம் அம்மாகாண சபைக்கான விடயதானங்களை தெளிவாக வரையறுத்தல்.

**மூன்றாவது கட்டம்**

புலிகள் இயக்கம் உட்பட சகல அரசியல் கட்சிகளினதும் அங்கீகாரத்துடன், தமிழ் பேசும் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றக் கூடிய இறுதியானதும் நிரந்தரமானதுமான தீர்வொன்றை முன்வைக்க வகைசெய்தல். இந்த நடவடிக்கையானது அப்பிராந்தியத்தினுள் அதிகூடிய அதிகாரங்களை பகிர்வதற்கும், முடிவின்றி நீண்டு செல்லும் யுத்த நடவடிக்கைகளில் இருந்து மீளுவதற்கும் தமிழ், முஸ்லிம், சிங்கள சமூகங்கள் எதிர்காலத்தில் ஒருவர் மீது ஒருவர் நம்பிக்கை வைத்து செயற்படவும் வகைசெய்யும். ■

## செயலாளர் நாயகம் தோழர் டக்ளஸ் தேவானந்தா இந்திய பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜியுடன் சந்திப்பு

ஐ.நா.வின் வருடாந்த மாநாட்டில் இலங்கை ஜனாதிபதி தலைமையிலான குழுவினருடன் சென்று கலந்துகொண்ட ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும், அமைச்சருமான தோழர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள், இந்திய பாதுகாப்பு அமைச்சர் பிரணாப் முகர்ஜி அவர்களை அமெரிக்காவில் சந்தித்து விரிவான பேச்சுக்களை நடத்தினார்.




இந்திய இலங்கை நேச உறவுகள் குறித்தும், தமிழ் பேசும் மக்களின் அரசியலுரிமைப் பிரைச்சினைத் தீர்விற்கான இந்தியாவின் பிரதான பங்களிப்பு குறித்தும் கலந்துரையாடப்பட்ட இச்சந்திப்பில் புலிகள் மேற்கொண்டிருக்கும் தொலைதூர நோக்கற்ற வன்முறை செயற்பாட்டால் அதிகம் பாதிக்கப்பட்டிருப்பது ஈழத் தமிழ் பேசும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மக்கள்தான் என்ற உண்மையைச் செயலாளர் நாயகம் அவர்கள் தெளிவாக எடுத்துரைத்திருந்தார். புலிகளின் பிரைச்சினை என்பது வேறு தமிழ் பேசும் மக்களின் பிரைச்சினை என்பது வேறு என்றும் இதையே ஈ.பி.டி.பி மிக நீண்ட காலமாகவும் தொடர்ச்சியாகவும் வலியுறுத்தி வருவது குறித்தும் விரிவாக எடுத்துக் கூறப்பட்டது.

இந்த அடிப்படை விடயத்திலும் ஈ.பி.டி.பியினதும் இந்தியாவினதும் நிலைப்பாடு ஒன்றாக இருப்பது குறித்து தான் அரசியல் ரீதியாக திருப்தி அடைவதாகவும் தெரிவித்த செயலாளர் நாயகம், தமிழ் பேசும் மக்களின் பிரைச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை ஏற்படுத்த இந்தியா விரைவான

**புலிகளை ஏகபிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ள முடியாது என்பதையும், புலிகளால் தொடரப்படும் வன்முறை அரசியலுக்கும் படுகொலை கலாச்சாரத்திற்கும் ஆதரவு அளிப்பதை நிறுத்த வேண்டும் எனவும், அரசியல் தீர்வு நோக்கி முடிந்தால் புலிகளை அழைத்து வரவேண்டும் எனவும், புலிகளின் தொங்குதசை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்தியா அழுத்தம் கொடுப்பதை தான் எதிர்பார்பதாகவும், செயலாளர் நாயகம் இந்திய பாதுகாப்பு அமைச்சரிடம் எடுத்துரைத்தார்**

செயற்பாட்டில் இறங்க வேண்டும் என்ற கோரிக்கையினையும் விடுத்தார். ஈ.பி.டி.பி இந்தியாவுடன் பேசுவதும், தொடர்ந்தும் பேச விரும்புவதும் தமிழ் பேசும் மக்களின் பிரைச்சினைகளை மட்டும்தான். ஆனால் வாரக்கணக்கில் தமிழகத்தில் காத்திருந்து இந்திய தலைநகர் டெல்லி நோக்கி சென்ற புலிகளின் தொங்குதசை பாராளுமன்ற உறுப்பினர்கள் பேச விரும்புவது புலிகளின் பிரைச்சினைகளை மட்டும்தான் என்றும் செயலாளர் நாயகம் அவர்கள் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளார்.

புலிகளை ஏகபிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ள முடியாது என்பதையும், புலிகளால் தொடரப்படும் வன்முறை அரசியலுக்கும் படுகொலை கலாச்சாரத்திற்கும் ஆதரவு அளிப்பதை நிறுத்த வேண்டும் எனவும், அரசியல் தீர்வு நோக்கி முடிந்தால் புலிகளை அழைத்து வரவேண்டும் எனவும், புலிகளின் தொங்குதசை பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்தியா அழுத்தம் கொடுப்பதை தான் எதிர்பார்பதாகவும், செயலாளர் நாயகம் இந்திய பாதுகாப்பு அமைச்சரிடம் தெளிவாக எடுத்துரைத்தார். பேசப்பட்ட பெரும்பாலான விடயங்கள் தொடர்பாக இந்திய அமைச்சர் மிகவும் சாதகமான பிரதிபலிபுக்களை செய்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. ■



## ஐக்கிய இலங்கைக்குள் காணப்படாத தீர்வு சாத்தியமாகக் கூடியதல்ல
## - இந்திய மத்திய அமைச்சர் மணிசங்கர ஐயர் -



ஐக்கிய இலங்கைக்குள் காணப்படாத தீர்வு விரும்பத் தக்கதோ, சாத்தியமாகக் கூடியதோ அல்ல. அதேவேளை அதிகபட்ச அதிகாரப் பகிர்வு விரும்பத்தக்கதென இந்திய மத்திய அமைச்சர் மணிசங்கர ஐயர் தெரிவித்தார். எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் 47வது சிரார்த்த தின நிகழ்வுகளில் கலந்து கொண்ட பின்னர் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நினைவுப் பேருரையை ஆற்றுகையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இலங்கை தனது ஐக்கியத்தையும், பிரதேச ஒருமைப் பாட்டையும் காப்பாற்றுவதற்காக மேற்கொள்ளும் முயற்சிகள் வெற்றி பெற வேண்டும் என விரும்புவதாக குறிப்பிட்டுள்ள இந்தியாவின் பஞ்சாயத்து ஆட்சி விவகாரங்களுக்கான அமைச்சர் மணிசங்கர ஐயர் இலங்கையின் ஐக்கியத்தைக் காப்பாற்றாத தீர்வு விரும்பத்தக்கதல்ல, என்றும் குறிப்பிட்டார்.

இலங்கை என்றும் எமது இதயத்திற்கு நெருக்கமான நாடு. உங்களது முதலாவது சுதந்திர தினத்தன்று எமது முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேரு, இரு நாடுகளுக்கும் இடையிலான நல்லுறவுகள் விசேடமானவைகளாக விளங்குவதற்கான ஐந்து காரணங்களை (பஞ்சசீலக் கொள்கை) முன்வைத்தார். இவையே எமது உறவுகளுக்கு அடிப்படையாகவுள்ளன. எமக்கிடையே வேறு விதமான சிந்தனைகள் இருக்கலாம். அவ்வப்போது முறிவுகள் ஏற்படலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சகலவற்றிலும் எமக்கிடையே இணக்கப்பாடு இல்லாமல் போகலாம். எனினும் அடிப்படைக் கொள்கைகளில் எம்மிடையே எவ்வித வேறுபாடுகளுமில்லை. 2006ம் ஆண்டு சுதந்திர தினத்தன்று இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் சில அடிப்படை விடயங் களைத் தெளிவாக எடுத்துக் கூறியிருந்தார். இலங்கையின் ஐக்கியம், தேசிய ஒருமைப்பாடு போன்ற விடயங்களில் இந்தியா உறுதியான அக்கறையைக் கொண்டுள்ளது. இவை இலங்கை என்ற தேசத்தின் மிக முக்கியமான அடிப்படைகளாகும். இவை எவற்றையும் நாம் கைவிடமாட்டோம்.

இலங்கை தனது பிரைச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு மேற்கொண்டுள்ள முயற்சிகளை நாம் பாராட்டுகின்றோம். எனினும் நாங்கள் தீர்வுகளைத் திணிக்கவில்லை. தேசிய இணக்கப்பாட்டினை ஏற்படுத்துவதற்கு நீங்கள் மேற்கொண்டுள்ள முயற்சிகளைப் பாராட்டு கின்றோம். ஆனால் இது இலகுவான விடயமல்ல. உங்களிடம் என்ன தீர்வு உள்ளது என்பது எங்களுக்குத் தெரியாது. எனினும் எந்தத் தீர்வும் ஐக்கிய இலங்கைக்குள் உள்ளடக்கப்பட வேண்டும் என்பதை இந்தியா அங்கீகரிக்கின்றது, எனவும் அவர் மேலும் தெரிவித்தார். ■

---



## தோழர் டக்ளஸ் தேவானந்தா, இந்திய மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளர் பிரகாஷ் ஹரத் சந்திப்பு

கியூபாவில் நடைபெற்ற அணிசேரா நாடுகளின் உச்சி மாநாட்டிலும், நியூயோர்க் நகரில் நடைபெற்ற ஐக்கிய நாடுகளின் பொதுச்சபைக் கூட்டத்திலும் இலங்கை ஜனாதிபதி அவர்களின் தூதுக் குழுவோடு சென்று கலந்துகொண்டுவிட்டு, பல ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்று பல நாட்டுத் தலைவர்களையும் சந்தித்து, முக்கிய அரசியல் பேச்சுக்களை நடத்தி, நாடு திரும்பும் வழியில் இந்திய விஜயத்தை மேற்கொண்ட ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும், சமூக சேவைகள், சமூகநலத்துறை அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா இந்திய மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் பிரகாஷ் ஹரத் அவர்களையும் சந்தித்து, இலங்கை நிலவரங்கள் மற்றும் தமிழ் மக்களின் பிரைச்சினைகள் தொடர்பாகவும், இனப்பிரைச்சினை தீர்வுக்காக தமிழ் மக்களின் சார்பில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி முன்வைத்துள்ள நடைமுறைச் சாத்தியமான மூன்று கட்டத் தீர்வுத் திட்டம் குறித்தும் விரிவாக எடுத்து விளக்கினார். மேற்படி சந்திப்பு இருதரப்பு உறவுகளைப் பலப்படுத்தும் வகையில் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. ■





## ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் இலண்டன் தமிழ் முஸ்லீம் பிரதிநிதிகளுடன் சந்திப்பு

கியூபாவில் நடந்த அணிசேரா நாடுகளின் மாநாட்டில் கலந்து கொண்டுவிட்டு திரும்பும் வழியில், இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவும் அமைச்சர் தோழர் டக்ளஸ் தேவானந்தாவும் இலண்டனில் இலங்கைத் தமிழ் முஸ்லிம் சமூக பிரதிநிதிகளைச் சந்தித்தனர். கடந்த செப்டெம்பர் மாதம் 24ந் திகதி சனிக்கிழமை இலண்டனில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தில் இச்சந்திப்பு நிகழ்ந்தது. தமிழ், முஸ்லீம் அரசியல் கட்சிகளினதும் மனித உரிமை, ஜனநாயக அமைப்புக்களினதும் பிரதிநிதிகளை அவர்கள் சந்தித்தனர்

இச்சந்திப்பில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் மறைந்த தலைவர் திரு. அ.அமிர்தலிங்கம் அவர்களின் துணைவியார் திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம், அவரது மகன் வைத்திய கலாநிதி பகீரதன், மற்றும் வைத்திய கலாநிதி நிக்கலஸ்பிள்ளை, வைத்திய கலாநிதி பாலா, தமிழர் ஜனநாயக காங்கிரஸ் தலைவர் திரு.ஜெயதேவன், விவேகானந்தன், ஐ.தே.கட்சியின் இரத்தினபுரி பிரமுகர் சதீஸ்குமார், இலண்டனிலுள்ள ஸ்ரீலங்கா முஸ்லீம் தகவல் நடுவத்தின் இயக்குனர் சட்டத்தரணி பஷீர் ஆகியோரும் மற்றும் தமிழ்க் கட்சிப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் பிரதானமாக இலங்கைத் தமிழ் மக்களின் சார்பில் கலந்து கொண்டிருந்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா புலம்பெயர் தமிழ் பேசும் மக்களின் குரல்களை கேட்க வேண்டிய தேவையின் முக்கியத்துவத்தை ஜனாதிபதிக்கு வற்புறுத்தினார். ஈ.பி.டி.பி கட்சியின் அமைப்பாளர் அசோக், ரமேஷ், வினோத், மனோ, திலீப், ஆகியோரும் புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப் (பத்மநாபா அணி), டெலோ, எனப் பல கடசிப்

www.tamilarangam.net

பிரதிநிதிகள், பத்திரிகையாளர்கள், சமாதான செயற்பாட்டாளர்கள், சமூக சேவையாளர்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர். இச்சந்திப்பில் கலந்து கொண்ட அனைவருமே தமிழ், முஸ்லிம் மக்களின் பிரைச்சினை தீர்க்கப்பட வேண்டும் என்பதினை வலியுறுத்தினர். குறிப்பாக திரு.ஜெயதேவன் அவர்கள், 13வது திருத்தச் சட்டம் அமுலாக்கப்பட்டு மாகாணசபை நிர்வாகம் தற்காலிகமாக இயங்க வாய்ப்புண்டா, அல்லது நிரந்தர சமாதானத்திற்கான செயற்பாட்டினை வழங்கும் அரசியல் தீர்வை தாமதிக்காது அரசு கொண்டுவருமா? என்று கேள்வி எழுப்பினார்.

தமிழர் சமாதான மன்றம் சார்பில் ஒரு அறிக்கையை கலாநிதி பாலா வாசித்து அதனை ஜனாதிபதியிடம் சேர்ப்பித்தார். அவ்வறிக்கையில், அடிமட்டத்திலிருந்து ஜனாதிபதியாகியிருக்கும் மகிந்த ராஜபக்ஷ தமிழ் பேசும் மக்களினது மட்டுமல்ல, சகல சாமான்ய மக்களின் துயரங்களைப் புரிந்திருக்க வேண்டும் என்றும், ஏனைய ஜனாதிபதிகள் போலல்லாது உளசுத்தியுடன் இனப்பிரைச்சினைக்கான தீர்வினை கொண்டு வரவேண்டும் என்றும், இலங்கையில் ஒற்றுமையுடனும் கௌரவத்துடனுமே தமிழ் பெசும் மக்கள் வாழ விரும்புவதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஸ்ரீலங்கா முஸ்லீம் தகவல் நடுவத்தின் சார்பில் பேசிய சட்டத்தரணி திரு.பஷீர், முஸ்லீம்களைப் பாதித்த பொத்துவில் சம்பவம் குறித்து அரசபடைகள் மீதான குற்றச்சாட்டினை ஜனாதிபதி கவனத்தில் எடுத்து சுயாதீனமான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற வேண்டுகோளையும், மக்களைப் பாதுகாக்க வேண்டிய கடமையில் இருந்து அரசு தவறவில்லை என்பதை நிருபிக்கும் பொறுப்பு ஜனாதிபதிக்கு உரியதென்றும் குறிப்பிட்டார்.

பலரின் கேள்விகளுக்கும் பதிலளித்த ஜனாதிபதி, சர்வகட்சி மாநாட்டின் தீர்வினை தான் நம்பியிருப்பதாகவும், தனது தலையீடின்றி சர்வகட்சி மாநாடு எட்டுகின்ற தீர்வினை மக்கள் முன் சமர்ப்பித்து ஆணை பெறவிருப்பதாகவும், தெற்கிலே ஒருமைப்பாடு காணாவிடின் எந்தத் தீர்வினையும் அமுல்படுத்துவது கடினம் என்றும் குறிப்பிட்டார்.

இச்சந்திப்பு வெறுமனே பிரமுகர்களின் சந்திப்பாக அமையாமல் இனப்பிரைச்சினைக்கு நீதியானதும் நியாயமானதுமான தீர்வு தொடர்பாக புலம்பெயர் தமிழ் பெசும் மக்கள் கொண்டிருந்த அக்கறையை வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தது. ■





## தமிழ் பேசும் மக்களின் அரசியலுரிமை தீர்விற்கு ஆதரவு வழங்குங்கள்

**-சுவிஸ் அரசியல் கட்சிகளிடம் செயலாளர் நாயகம் வேண்டுகோள்-**

அண்மையில் அமெரிக்க ஐரோப்பிய விஜயங்களை மேற்கொண்டிருந்த செயலாளர் நாயகமும் அமைச்சருமாகிய தோழர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் சுவிஸில் பல்வேறு தரப்புகளையும் சந்தித்து, தமிழ் பேசும் மக்களின் சமகால அவலங்கள் குறித்து கலந்துரையாடினார். அவர், சுவிஸ் நாட்டின் பிரதான அரசியல் கட்சி பிரதிநிதிகளையும் சந்தித்து உரையாடினார்.

சுவிஸ் இடது கூட்டு அமைப்பில் அங்கம் வகிக்கும் பிரதான அரசியல் கட்சிகளான S.P, மற்றும் Green party ஆகியவற்றின் முக்கிய பிரதிநிதிகள், செயலாளர் நாயகம் அவர்களுடன் பிரத்தியேக சந்திப்பு ஒன்றை ஏற்படுத்தியிருந்தனர். ஈ.பி.டி.பியின் சுவிஸ் பிராந்திய முக்கியஸ்தர்கள், S. P, கட்சி மற்றும் Green party ஆகியவற்றின் முக்கியஸ்தர்களால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இச்சந்திப்பில் செயலாளர் நாயகம் அவர்களுடன் ஈ.பி.டி.பியின் சுவிஸ் பிராந்திய முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இரு தரப்பும் தங்களது கட்சிகளின் கொள்கை நிலைப்பாட்டை பரஸ்பரம் விரிவாக தெளிவுபடுத்தியதுடன், இலங்கையில் நடக்கும் மனித உரிமை மீறல்கள் குறித்தும் அதனால் மக்கள் முகம் கொடுத்து வரும் அவலங்கள் குறித்தும் கலந்துரையாடினர். இச்சந்திப்பில் கருத்து தெரிவித்திருந்த செயலாளர் நாயகம் அவர்கள், தமிழ் பேசும் மக்களின் உயிர்வாழும் உரிமை என்பது இன்று கேள்விக்குறியாகிவிட்டது என்றும் அதற்கான பிரதான காரணம் புலிகளால் தொடரப்படும் யுத்தமே என்றும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்றும் தெரிவித்தார். புலிகளுக்கு அரசியல் தீர்விலோ அன்றி சமாதானத்திலோ விரும்பம் கிடையாது என்றும் அவர்கள் மக்களின் விருப்பங்களுக்கு மாறாக ஒரு முடிவற்ற யுத்தத்தை மக்கள் மீது திணித்து வருவதாகவும் செயலாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

புலிகளுக்காக யாரும் காத்திருக்க முடியாது என்றும் மூன்றுகட்ட திட்டத்தின் ஊடாக தமிழ் பேசும் மக்களின் அரசியல் உரிமைகளை நோக்கி ஜனநாயக சக்திகள் பயணிக்க தயாராகி வருவதாகவும் சுவிஸ் அரசியல் கட்சி பிரதிநிதிகளிடம் எடுத்து விளக்கியிருந்தார்.

**தமிழ் பேசும் மக்களின் உயிர் வாழும் உரிமை என்பது இன்று கேள்விக் குறியாகிவிட்டது என்றும், அதற்கான பிரதான காரணம் புலிகளால் தொடரப்படும் யுத்த சூழலே என்றும், புலிகளுக்கு அரசியல் தீர்விலோ அன்றி சமாதானத்திலோ விரும்பம் கிடையாது என்றும், டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கூறினார்.**

மூன்று கட்டத் திட்ட நகர்வின் ஊடாக சமாதானத்தை அடையும் வழிமுறைக்கு சுவிஸ் அரசியல் கட்சிகளின் ஆதரவைக் கோரியிருந்த செயலாளர் நாயகம் அவர்களது துணிச்சலான எண்ணக்கருக்களை கண்டு வியந்த சுவிஸ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், தங்களது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்திருந்தனர்.

இது போன்ற சந்திப்புகள் ஆக்கபூர்வமானவை என்றும், அடுத்த சந்திப்பில் தமிழ் பேசும் ஜனநாயக சக்திகள் கொண்டிருக்கும் மூன்று கட்ட திட்டம் குறித்து இன்னும் விரிவாக ஆராயப்படும் என்றும் இரு தரப்பும் தீர்மானித்துக் கொண்டனர். சுவிஸ் சமஷ்டி அரசின் 2006ம் ஆண்டுக்கான ஜனாதிபதி Moritz Leuenberger, அவர்கள் S.P கட்சியை பிரதிநிதித்துவப் படுத்துபவர் என்பதும், அவரை செயலாளர் நாயகம் அவர்கள் நியூயோர்க்கில் சந்தித்து உரையாடியிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. ■





## செயலாளர் நாயகம் தோழர் டக்ளஸ் தேவானந்தா சுவிஸ் அரச உயர் பிரதிநிதிகளுடன் சந்திப்பு

அமெரிக்க, மற்றும் ஐரோப்பிய விஜயங்களை மேற்கொண்டிருந்த ஈ.பி.டி.பி செயலாளர் நாயகம் தோழர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள், சுவிஸ் அரச உயர் பிரதிநிதிகளுடன் முக்கிய சந்திப்புகளை நடத்தினார். சுவிஸ் வெளிவிவகார அமைச்சின் முக்கிய பிரதிநிதிகளை அமைச்சின் அலுவலகத்தில் சந்தித்து உரையாடிய தோழர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள், தமிழ் பேசும் மக்கள் முகம்கொடுக்கும் அனைத்து பிரைச்சினைகள் குறித்தும் எடுத்து விளக்கினார். ஈ.பி.டி.பி சுவிஸ் பிராந்திய பிரதிநிதிகளால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்நிகழ்வில் செயலாளர் நாயகம் அவர்களுடன் சுவிஸ் பிராந்திய அமைப்பாளர் திலக் மற்றும் விந்தன், தாஸ், ஆகிய முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

தமிழ் பேசும் மக்கள் யுத்தத்தை வெறுப்பதாகவும் அமைதி சமாதானம் அரசியலுரிமை குறித்த எதிர்பார்ப்புகளே அவர்களது மன விருப்பங்களாகும் என்றும் செயலாளர் நாயகம் சுவிஸ் அரச பிரதிநிதிகளிடம் எடுத்து விளக்கியிருந்தார். ஆனால் புலிகளின் விருப்பம் என்பது அழிவுகளை மட்டும் தருகின்ற முடிவற்றதொரு யுத்தம் மட்டுமே என்றும் கருத்துத் தெரிவித்திருந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செயலாளர் நாயகம் அவர்கள், புலித் தலைமையால் தமிழ் பேசும் மக்கள் அனுபவித்துவரும் அவலங்கள் குறித்தும் தெளிவாக எடுத்து விளக்கினார்.

சுவிஸில் புலிகளால் மேற்கொள்ளப்படும் பலாத்கார நிதி வசூலிப்பு குறித்து விபரித்திருந்த செயலாளர் நாயகம் அவர்கள், இது குறித்து சுவிஸ் அரசு அதிக கவனம் செலுத்த வேண்டும் எனவும் புலம் பெயர்ந்து வாழும் தமிழ் பேசும் மக்களின் ஜனநாயக உரிமைகளை பாதுகாக்க வேண்டிய கடமை சுவிஸ் அரசுக்கு உண்டு என்றும் இதில் கவனம் செலுத்த வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

**மூன்று கட்டத் திட்டத்திற்கூடான அரசியல் இலக்கு நோக்கிய பயணத்திற்கு சுவிஸ் அரசு ஆதரவு வழங்க வேண்டும் எனவும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் அவர்கள் இச்சந்திப்பின்போது கோரிக்கை விடுத்திருந்தார்.**

தமிழ் பேசும் மக்களின் அரசியலுரிமை குறித்து ஈ.பி.டி.பி யும் புலம்பெயர்ந்து வாழும் மாற்றுக் கருத்துடையவர்கள் மற்றும் மனிதநேயவாதிகளும் கொண்டிருக்கும் கருத்தான மூன்று கட்டத் திட்டத்தின் நகர்வு குறித்து தெளிவுபடுத்திய செயலாளர் நாயகம் அவர்கள் இது குறித்த பலரும் எழுப்பிய கேள்விகளுக்கும் விடையளித்தார்.

மூன்று கட்டத் திட்டத்திற்கூடான அரசியல் இலக்கு நோக்கிய பயணத்திற்கு சுவிஸ் அரசு ஆதரவு வழங்க வேண்டும் எனவும், ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் அவர்கள் இச்சந்திப்பின் போது கோரிக்கை விடுத்திருந்தார். சுவிஸ் அரச உயர் பிரதிநிதி களுடனான இச்சந்திப்பு மிகவும் ஆரோக்கியமானதாகவும் ஆக்கபூர்வமான எதிர்கால செயல் திட்டங்களுக்கு வழிவகுத்திருப் பதாகவும் ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான தோழர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கருத்து தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்க விடயமாகும். ■






**செயலாளர் நாயகம் தோழர் டக்ளஸ் தேவானந்தா ஜேர்மனியில் ஆளும் கட்சி பிரதிநிதிகளுடன் சந்திப்பு**

ஐரோப்பிய அமெரிக்க விஜயங்களை மேற்கொண்ட ஈ.பி.டி.பி செயலாளர் நாயகமும், அமைச்சருமான தோழர் டக்ளஸ் தேவானந்தா தனது தொடர்ச்சியான சந்திப்புகளின் வரிசையில் ஜேர்மனியில் பல தரப்புகளையும் சந்தித்து விரிவான உரையாடல் களை நிகழ்தினார். ஜேர்மன் ஆளும் கட்சியான எஸ். பி.டி. கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும் அக்கட்சியின் வெளிநாட்டுக் கொள்கை வகுப்பாளருமாகிய *Prof. Gert Weisskirchen* மற்றும் அக்கட்சியின் ஏனைய தலைவர்கள் சிலருடனும் சந்திப்புகளை மேற்கொண்டார்.

இச்சந்திப்பின் போது இலங்கையின் சமகால அரசியல் நிகழ்வுகள் குறித்தும் தமிழ் பேசும் மக்கள் கொண்டிருக்கும் யுத்தத்தின் மீதான வெறுப்பையும், சமாதான விருப்பையும் தெளிவாக எடுத்துரைத்துள்ளார். அத்துடன் புலித் தலைமையால் தாயகத்தில் நடத்தப்படும் மாற்றுக் கருத்துடையவர்கள் மற்றும் பொது மக்கள் மீதான படுகொலைகளையும், புலம் பெயர்ந்து வாழும் எம்மவர்கள் மீதான புலிகளின் கெடுபிடிகளையும் செயலாளர் நாயகம் அவர்கள் எடுத்து விளக்கியிருந்தார். புலம் பெயர்ந்து வாழும் ஜனநாயக சக்திகள் மற்றும் மாற்றுக் கருத்துக் கொண்டவர்கள் மீதான புலிகளின் அச்சுறுத்தல்களையும் தெளிவாக எடுத்துரைத்திருந்த செயலாளர் நாயகம் அவர்கள் இது குறித்து ஜேர்மன் அரசு அதிக கவனம் செலுத்தி புலம் பெயர்ந்த தமிழ் பேசும் மக்களினது ஜனநாயக

www.tamilarangam.net

உரிமைகளை பாதுகாக்கும் நடவடிக்கைகளில் அக்கறை செலுத்த வேண்டிய அவசியத்தையும் எடுத்துரைத்தார். இந்நிகழ்வில் புலம் பெயர்ந்து ஜேர்மனியில் வாழும் தமிழ் பேசும் மக்கள் அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்படுவதை நிறுத்த வேண்டும் எனவும் செயலாளர் நாயகம் அவர்கள் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

செயலாளர் நாயகத்தை தொடர்ந்து உரையாற்றிய *Prof. Gert Weisskirchen* அவர்கள், இன்று நடக்கும் உள்நாட்டு யுத்தத்தில் குற்றவாளிகள் யார் என்பது தமக்கு தெளிவாக தெரியும் என்றும், பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு ஜேர்மனியில் ஒருபோதும் அனுமதி கிடையாது என்றும் உறுதியளித்தார். இது குறித்து புலிகளால் நடத்தப்பட்டு வரும் வன்முறைகளையும் அவர் ஒப்புக் கொண்டுள்ளார். குறிப்பாக புலம் பெயர் மக்களிடம் இருந்து கட்டாய வரி அறவிடுவது, அதற்கு ஒத்துவராதவர்களின் உறவினர்களை தாயகத்தில் அச்சுறுத்தி புலிகள் பணயம் வைப்பது என்பவற்றை *Prof. Gert Weisskirchen* அவர்கள் வெளிப்படையாகவே ஒப்புக் கொண்டுள்ளார். இது குறித்து புலிகளின் அச்சுறுத்தல் இருக்கும் பட்சத்தில் ஆளும் கட்சியான எஸ்.பி.டிக்கு ஊடாக தங்களுக்கு தகவல்களை வழங்கலாம் எனவும் சம்பந்தப்பட்டவர்களின் விபரங்கள் அவர்களது பாதுகாப்பு கருதி வெளியிடப்பட மாட்டாது எனவும் அவர் உறுதியளித்துள்ளார்.

மனித உயிர்கள் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய அவர் ஜனநாயகத்திற்காகவும் அரசியலுரிமைக்காகவும் உழைத்து வரும் செயலாளர் நாயகம் தோழர் டக்ளஸ் தேவானந்தா அவர்களை கொன்றொழிப்பதற்கு புலிகள் எடுத்து வரும் சகல பிரயத்தனங்களையும் வன்மையாக கண்டித்துள்ளார். இதேவேளை அகதி அந்தஸ்து நிராகரிக்கப்பட்டு எம்மவர்கள் திருப்பி அனுப்பப்படுவது குறித்து தான் உரிய இடத்தில் பேச இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் செயலாளர் நாயகம் தோழர் டக்ளஸ் தேவானந்தா அவர்களுடன் கட்சியின் ஜேர்மன் அமைப்பாளர் தோழர் ஜெயா, செல்வம், தோழர் *Bernd Finke*, றொபேட் உட்பட ஜேர்மன் பிராந்திய தோழர்கள், சுவிஸ் பிராந்திய முக்கியஸ்தர்கள் தோழர் விந்தன், முரளி, மகேந்திரா, ரஞ்சன் மற்றும் ஈரோஸ் பிரபா, குகன் ஆகிய மாற்றுக் கருத்துடைய ஜனநாயக சக்திகள், இலக்கியவாதிகள் உட்பட பலரும் கலந்துகொண்டனர். ஜேர்மன் மொழியில் தேர்ச்சி பெற்றவரும் இடதுசாரி முக்கியஸ்தருமாகிய தோழர் அழகலிங்கம் அவர்கள் மொழிபெயர்ப்பாளராகவும், முற்போக்கு ஜனநாயகத்தின் குரலாகவும் கலந்துகொண்டு இந்நிகழ்வில் தனது பங்களிப்பையும் செலுத்தியிருந்தார். தோழர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் எடுத்து விளக்கியிருந்த மூன்று கட்ட நகர்விறகூடான அரசியல் தீர்வு நோக்கிய பயணத்திற்கு கலந்து கொண்டிருந்த அனைவரும் தங்களது முழு அங்கீகாரத்தையும் ஆதரவையும் வழங்கினர். ■





## எனது அனுபவங்கள்தான் என்னை இவ்வாறு பேச வைக்கின்றன
## - பாரிஸ் சந்திப்பில் தோழர் டக்ளஸ் தேவானந்தா -

**பு**லிகள் வேறு இயக்கம் நாங்கள் வேறு இயக்கம் என்பதால் நான் புலிகளை விமர்சிக்கவில்லை. அப்படியான ஒரு போட்டி அரசியலில் ஈடுபட வேண்டும் என்ற எண்ணங்களும் எனக்கு ஒருபோதும் இருந்ததில்லை! இது வரை காலமும் எனது நடைமுறையில் நான் சந்தித்து வந்த அனுபவங்கள் மட்டும்தான் என்னை இவ்வாறு பேச வைக்கின்றன, என்று பிரான்ஸ் தலைநகரான பாரிஸ் நகரத்தில் ஒழுங்கு செய்யப்பட்ட விசேட சந்திப்பில் ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் சமூக சேவைகள் மற்றும் சமூக நலத்துறை அமைச்சருமாகிய தோழர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் தெரிவித்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மாற்றுக் கருத்துகளுக்காக குரல் கொடுத்துவரும் பல்வேறு ஜனநாயக சக்திகளினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இக்கூட்டத்தில் மனித நேயவாதிகள், ஜனநாயக சக்திகள், இலக்கியப் படைப்பாளிகள், முன்னாள் போராளிகள், பொதுமக்கள் என பல தரப்பட்ட முகங்களும் சந்தித்துக் கொண்டன. அங்கு தொடர்ந்து கருத்து தெரிவித்திருந்த செயலாளர் நாயகம் அவர்கள், இன்று தமிழ் பேசும் மக்களின் அரசியலுரிமைக்கான பயணம் என்பது சகதியில் புதைந்து போயிருக்கின்றது. இதை முன்நோக்கி நகர்த்த வேண்டிய வரலாற்றுக் கடமை இங்கு வந்திருக்கும் உங்களது கைகளிலும் இருக்கின்றது. எங்கிருந்து தொடங்குவது என்பது குறித்த விடயங்களைத்தான் நான் இன்று உங்களோடு பேசுகிறேன்.

**புலிகளின் வழிமுறையால் எந்தத் தீர்வையும் எட்டிவிட முடியாது. ஆகவேதான் தமிழ் பேசும் மக்களுக்கான அரசியல் உரிமையை வென்றெடுப்பதற்கான பணியை ஒரு பொது வேலைத் திட்டமாக அனைவரும் கருதி செயற்பட வேண்டியுள்ளது.**

செயலிழந்து போயிருக்கும் வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கு ஒரு அரசியல் தலைமையை கொடுத்து அதிலிருந்துதான் நாம் அரசியலுரிமை நோக்கி பயணப்பட முடியும். இதுவே நடைமுறைச் சாத்தியமான வழிமுறையாகும். இதுவே தமிழ் பேசும் மக்களை உயிரழிவுகளில் இருந்து காப்பாற்ற முடிந்த செயற் திட்டமுமாகும். புலிகளின் தலைமை தமிழ் பேசும் மக்களுக்கு ஒரு அரசியல் தீர்வை பெற்றுக் கொடுப்பதற்கு தயாரில்லை. அவர்கள் யுத்தத்தின் மீது மட்டும் விருப்பங்கொண்டு செயற்படுகின்றார்கள்.

புலிகளின் வழிமுறையால் எந்தத் தீர்வையும் எட்டிவிட முடியாது. ஆகவேதான் தமிழ் பேசும் மக்களுக்கான அரசியல் உரிமையை வென்றெடுப்பதற்கான பணியை ஒரு பொது வேலைத் திட்டமாக அனைவரும் கருதி செயற்பட வேண்டியுள்ளது. இவ்வாறு தெரிவித்திருந்த செயலாளர் நாயகம் அவர்களின் கருத்துக்களை அதில் கலந்து கொண்டவர்கள் பலரும் ஏற்றுக்கொண்டிருந்தனர். பல்வேறுபட்ட கருத்துக்கள், வாதப் பிரதிவாதங்களுடனான ஒரு ஆரோக்கியமான சந்திப்பாக இது அமைந்திருந்தது. ■



## இந்தியாவைப் போல் கூட்டாட்சி முறையே இனப்பிரைச்சினைக்கு தீர்வு - ஆனந்தசங்கரி, சித்தார்த்தன், ஸ்ரீதரன் - டெல்லிக் கருத்தரங்கில் தெரிவிப்பு

இந்தியாவைப் போன்றதொரு கூட்டாட்சி முறையை வழங்குவதே இலங்கை இனப்பிரைச்சினைக்கு சரியான தீர்வாக இருக்கும் என்று ஆனந்தசங்கரி, சித்தார்த்தன், ஸ்ரீதரன் ஆகியோர். டெல்லிக் கருத்தரங்கில் வலியுறுத்தினார்கள். மேலும், இலங்கை இனப்பிரைச்சினை தொடர்பாக தீர்வுகாண இந்தியா முழுமனதோடு முன்வர வேண்டும் என்றும் அவர்கள் TULF - PLOTE - EPRLF (பத்மநாபா அணி) சார்பாக கோரிக்கை விடுத்தனர்.

இலங்கையின் இனப்பிரைச்சினைக்கு நிரந்தர தீர்வொன்றை காண்பது தொடர்பாக இந்தியாவின் அக்கறை அதிகரித்துள்ள தற்போதைய நிலையில், புலிகளின் அழிவுகரமான அரசியலைக் கண்டிக்கும் தமிழ் அமைப்புக்களான தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைவர் வீ.ஆனந்தசங்கரி, தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவர் டி. சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எப் (பத்மநாபா அணி) தலைவர் டி. ஸ்ரீதரன் ஆகியோர் டெல்லி வந்தனர்.



“அமைதி மற்றும் மோதல்கள் ஆய்வு அமைப்பு” (ஐ.பி.சி.எஸ்) நடத்திய கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசும்போதே அவர்கள் மேற்கண்ட கருத்துக்களை வெளியிட்டனர். இக்கருத்தரங்கில் பேசும்போது திரு. ஆனந்தசங்கரி அவர்கள் கூறியது:

இலங்கை இரண்டாகப் பிளவுபட இந்தியா ஒருபோதும் சம்மதிக்காது. இலங்கை இனப்பிரைச்சினைக்குத் தீர்வுகாண ஒரேயொரு மாற்று வழி, இந்தியாவில் உள்ளதைப் போன்ற கூட்டாட்சி முறையிலான ஒரு தீர்வை முன்வைப்பதுதான். கடந்த ஐம்பது ஆண்டுகளாக, கூட்டாட்சி முறைக்கு இலங்கையில் யாரும் தயாராக இருக்கவில்லை. ஆனால், இதற்கு முதல் முறையாக இலங்கையில் உள்ள ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியும் மற்றும்

www.tamilarangam.net

ஐக்கிய தேசியக் கட்சி ஆகிய இரு பெரும் கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளன. அமைதித் தீர்வானது இன்று வாசல் கதவைத் தட்டிக் கொண்டிருக்கிறது. அதை நாம்தான் வரவேற்க வேண்டும்.

ஆயுதப் போராட்டம் இனிமேல் வெற்றி பெறாது. தனிநாடு கிடைக்காது. ஆயிரக்கணக்கானோரை இனியும் நாம் பலி கொடுக்கக்கூடாது. கூட்டாட்சி முறைதான் சரியான தீர்வாக இருக்கும் என்று தமிழ்நாட்டுத் தலைவர்கள் விடுதலைப் புலிகளுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். ஜனதா விமுக்தி பெரமுன என்ற சிங்கள கடும்போக்காளர் கட்சியுடன் அதிபர் மஹிந்த ராஜபக்ஷ தேர்தலுக்காக ஏற்படுத்திய ஒப்பந்தத்தின்படி, கூட்டாட்சி முறையை ஏற்படுத்த முடியாது. ஆனால், அந்த ஒப்பந்தத்தை மீறி அவர் செயல்படுவதற்கான நேரம் நெருங்கி வந்துகொண்டிருக்கிறது. இந்திய கூட்டாட்சி முறை என்று சொல்லாமல், அதிக அதிகாரம் என்று அவர் பேசி வருகிறார்.

தமிழ் மக்களின் உரிமைகளுக்காகப் போராடுவதாக வெளி உலகுக்கு புலிகள் பறைசாற்றிக் கொள்கின்றனர். ஆனால், 1983-ல் இருந்த உரிமைகள்கூட இப்போது இல்லை. புலிகளைப் பற்றி கொழும்பில்கூட எதிர்த்துப் பேச முடியாது. சிங்களவர்களால் கொல்லப்பட்டவர்களை விடவும் விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்ட தமிழர்கள்தான் இலங்கையில் அதிகம்.

முல்லைத்தீவில் செஞ்சோலையில் அனாதைச் சிறுவர், சிறுமியர் கொல்லப்பட்டதாக புலிகள் பரப்பிய செய்தியானது பொய்ப் பிரச்சாரமாகும். அங்கு, 18-19வயதுக்கு உட்பட்ட பெண்களை கட்டாயமாக இழுத்துவந்து புலிகள் இராணுவப் பயிற்சி அளித்துக் கொண்டிருந்தனர். ஆனால், தமிழகத்தில் உண்மை நிலவரம் புரியாமல் கண்டனப் பேரணி நடத்துகின்றனர்.

தற்போது கருணாநிதி முதலமைச்சராக இருக்கிறார். தமிழகத்தைப் போலவே, இலங்கைத் தமிழர்களுக்கும் அதிகாரம் வழங்கப்படல் வேண்டும். கூட்டாட்சி முறையை ஆதரிப்பதாக அவர் சொன்னால் அதற்கு நல்ல வரவேற்பும் கிடைக்கும்.



இந்தியாவின் மத்திய புலனாய்வு அமைப்பின் முன்னாள் தலைவரும், ராஜீவ் காந்தி கொலை குறித்து விசாரணை நடத்திய சிறப்புப் புலனாய்வுக் குழுவின் தலைவருமான டி.ஆர்.கார்த்திகேயன், இந்திய-இலங்கை உடன்பாட்டின் நன்மை குறித்தும் அது முழுமையாக அமுல்படுத்தப்படாதது குறித்தும் கவலை வெளியிட்டார். அதை அமுல்படுத்தாமல் விட்டதன் மூலம், ராஜீவ் காந்தியை இலங்கை ஏமாற்றிவிட்டது என்றார் அவர்.

இலங்கைத் தமிழர்கள் அமைதியாகவும், மரியாதையாகவும் வாழும் நிலை உருவாக வேண்டும் என்ற ராஜீவ் காந்தியின் கனவு இன்னும் நனவாகவில்லை என்றும் அவர் கவலை வெளியிட்டார்.



தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைவர் டி. சித்தார்த்தன். டெல்லியில் நடைபெற்ற கருத்தரங்கில் பேசுகையில்:

இலங்கையில் இந்திய இராணுவ வீரர்கள் 1,500பேர் உயிர்த் தியாகம் செய்ததும், ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டதும் மிகுந்த வருத்தம் தரும் செய்திகள். அத்தியாகத்துக்கு உரிய கௌரவம் இன்னும் அளிக்கப்படவில்லை. இலங்கைத் தமிழர்கள் அமைதியாகவும், மரியாதையுடனும் வாழவேண்டும் என்று மனதார விரும்பியவர் ராஜீவ் காந்தி. ஆனால் அவரது கனவு இன்றுவரை நனவாகவில்லை.

